Eastern University
Academic Affairs
2 3 JAN 2020
Vantharumoolai
Chenkalady

# அகநானூற்று குறிஞ்சிப்பாடல்கள் பற்றிய ஓர் ஆய்வு.

LIBRARY
0 9 OCT 2020
EUSL, SRI LANKA

பெயர் : நா.நிரோஸ்காந்த்

பதிவிலக்கம் : EU/IS/2013/AC/142

சுட்டெண் : CS - 5292

FAC 827
Project Report
Library - EUSL

மொழித்துறை,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

2019

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# முன்னுரை

இவ்வாய்வானது முற்றுமுழுதாக நிறைவான ஆய்வாக அமைய வேண்டுமென்பது எனது அவாவாக இருந்தபோதிலும் என்னால் இயலுமானவரை எனது அறிவுக்கும, செயலுக்கும் எட்டிய வரையில் இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளேன். இதைவிட பன்மடங்கு விடயங்களை இப்பாடல்களினை மூலமாகக் கொண்டு ஆராயமுடியும் என்பது உண்மையே.

சங்க இலக்கிய தொகை நூல்களுள் ஒன்றான அகநானூற்றில் குறிஞ்சித்திணையில் அமைந்த எண்பது பாடல்களை ஆய்வு மூலங்களாகக் கொண்டு அவற்றில் வெளிப்படும் சில அடிப்படை அக இலக்கிய ஆக்கக் கொள்கைகள், அவற்றில் இடம்பெற்றுள்ள பிரதான பாத்திரங்கள், கவிதை வெளிப்பாட்டு முறைகளாக மிளிரும் சில இலக்கிய பண்புகள், இப்பாடல்களின் மூலம் வெளிப்படும் அரசியல்; சமூக; வரலாற்று பின்னணி என்பவற்றை இனங்கண்டு அவற்றில் சிறப்பாக சில கவனிக்கத்தக்க விடயங்களை பாடல்களில் இடம்பெறும் பகுதிகளை மேற்கோள்காட்டி ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

அந்தவகையில் முதலாவது அத்தியாயம் ஆய்வு அறிமுகமாக இவ்வாய்வின் , ஆய்வுப்பிரச்சினை, கருதுகோள், நோக்கம், ஆய்வுப்பரப்பு, ஆய்வு மூலங்கள், இலக்கிய மீளாய்வு என்பவை பற்றிய சிறு அறிமுகப்படுத்தலாக அமைகின்றது.

இரண்டாவது அத்தியாயம் இவ் அகநானூற்று குறிஞ்சிப் பாடல்களின் பின்னணியை அறியும் வகையில் சங்ககால இலக்கியங்களின் கால வரன்முறை, அக்கால இலக்கியங்கள், தொல்காப்பிய திணைக்கோட்பாடு, அதன் இன்றியமையாமை என்பவற்றை பற்றிய சிறு வெளிப்படுத்தலாக அமைவதுடன், அகநானூற்று குறிஞ்சிப்பாடல்களை அறிமுகப்படுத்தும் பகுதியாகவும் அமைகிறது.

மூன்றாவது அத்தியாயம் இப்பாடல்களில் முதல்; கரு; உரி பொருட்கள் பயின்று வந்துள்ள விதம், பாடலிற்குரிய தலைமக்களின் அந்தஸ்து நிலை, தலைமக்களின் உறவுநிலை; அவ்வுறவு நிலையில் ஏற்படும் இன்ப; துன்பங்கள், அவ்வுறவு நிலையின் வளர்ச்சிப்போக்கு என்பவற்றை படிமுறை ரீதியாக ஆய்வுக்குட்படுத்துவதாகவும், அவற்றில் தோழி பாத்திரம் வகிக்கும் பங்கு; செவிலித்தாயின் கடமையுணர்வு என்பவற்றை ஆராயும் பகுதியாகவும் அமைகிறது.

நான்காவது அத்தியாயத்தில் பொதுவாக ஆண், பெண் ஆகிய இருபாலாரிடத்திலும் காணப்படக்கூடிய தனித்துவமான பண்புகள் தலைமக்களிடத்தில் இவ்வொழுக்கத்தின்போது வெளிப்படும் தன்மை பற்றியும், தலைமக்கள்; தோழி; செவிலி கூற்றுக்கள் நிகழுமிடங்கள், தலைமக்கள் புலவ்களால் முன்னிலைப்படுத்தப்படும் விதம், அகப்பாடல் மரபில் முக்கிய அழகியல் அம்சமாகவும் பொருள் வெளிப்பாட்டு சாதனமாகவும் பயின்று வரும் உவமை, உள்ளுறை உவமை அணிகள், இறைச்சிப்பொருள் என்பவற்றை எடுத்துக்காட்டுவதாயும் அவை இடம்பெறும் சந்தர்ப்பங்களை ஆராய்வதாகவும் அமைகிறது. மேலும் இப்பாடல்களுக்கு அழகு

சேர்க்கும், அதைவிட முக்கியமாக பொருள் புலப்பாட்டுக்கு துணை செய்யும் இயற்கை பற்றிய வர்ணனைகள் புவியியல் ரீதியான இயற்கை சூழமைவுகள்; விலங்குகள், பறவைகள் என்பவற்றின் செயற்பாடுகள்; அவை இடம்பெறும் சந்தர்ப்பங்கள் என்றவாறு ஆராய்வதகவும் இவ்வத்தியாயம் அமைகின்றது.

ஐந்தாவது அத்தியாயம் அகப்பாடல் மரபிற்கு புறம்பாக இடம்பெற்றுள்ள புறச்செய்திகள், அவை இடம்பெற்றுள்ள சந்தர்ப்பங்கள், அப்புறச்செய்திகளில் கூறப்பட்டுள்ள வரலாற்று குறிப்புகள், புலவர்கள் அவற்றை வெளிப்படுத்தியுள்ளதன் பின்னணி என்பவற்றை ஆய்வதாகவும் உள்ளது.

ஆறாவது அத்தியாயத்தில் சங்கக் குறிஞ்சி மக்களின் வாழ்க்கையை கொண்டு நடாத்த ஏதுவாக அமைந்த சமூக, பொருளாதார விடயங்களை பிரதிபலிக்கும் நாட்டுவளம், தொழில்முறைகள், அம் மக்களிடையே காணப்பட்ட சமய ரீதியிலான வழிப்பாட்டு முறைகள், சடங்குகள், மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைகள், கலைகள், பொழுதுபோக்கு போன்ற இன்ன பிற பண்பாட்டு அம்சங்களையும் எடுத்துக்காட்டுவதாக இப்பகுதி அமைகிறது. ஏழாவது அத்தியாயம் ஆய்வு முடிவுரையாக அமைகின்றது.

## சுருக்கவிளக்கம்

1. அகம் - அகநானூறு
2. தொல் - தொல்காப்பியம்
3. பொருள் - பொருளதிகாரம்
4. இளம் - இளம்பூரணம் உரை
5. நச் - நச்சினார்கினியம் உரை
6. சூ - சூத்திரம்
7. ப – பக்கம்
8. பக் - பக்கங்கள்

**உள்ளடக்கம்** **பக்கம்**


1. முதவாவது அத்தியாயம்

1.1. ஆய்வுத்தலைப்பு.......................................................... 1

1.2. ஆய்வு அறிமுகம்........................................................ 1

1.3. ஆய்வு நோக்கம்.......................................................... 1

1.4. ஆய்வுப்பிரச்சினை....................................................... 2

1.5. ஆய்வுக்கருதுகோள்..................................................... 2

1.6. ஆய்வின் முக்கியத்துவம்.............................................. 2

1.7. ஆய்வு மூலங்கள்.......................................................... 2

1.8. இலக்கிய மீளாய்வு...................................................... 3-4

1.9. ஆய்வு ஒழுங்கமைப்பு.................................................... 4

2. இரண்டாவது அத்தியாயம்

2.1. சங்க இலக்கியமும் அகநானூறும்....................................... 7-8

2.2. சங்க இலக்கியமும் தொல்காப்பியமும்.............................. 8-9

2.3. திணைக்கோட்பாட்டின் முக்கியத்துவம்............................. 9-10

2.4. சங்க இலக்கிய கவிதைப்பொருள் மரபான அகமும் புறமும்.......... 10-12

2.5. சங்க இலக்கிய அகத்திணையுள் குறிஞ்சித்திணை..................... 12-13

2.6. அகநானூறும் குறிஞ்சித்திணை பாடல்களும்............................ 13

3. மூன்றாவது அத்தியாயம்

3.1. முதல், கரு, உரி பொருள்களின் பயன்பாடு............................. 14-27

3.2. அகப்பாடல் பாத்திரங்கள்.................................................. 27-32

3.3. களவொழுக்கத்தில் தலைமக்கள் உறவு................................33-59

3.4. கற்பொழுக்கம்............................................................... 59-61

3.5. தோழியின் பங்கு............................................................ 61-69

3.6. செவிலித்தாயின் பங்கு..................................................... 69-71

4. நான்காவது அத்தியாயம்

4.1. அகப்பாடல் பாத்திரங்களின் இயல்புகள்................................ 72-76

4.2. கூற்றுக்கள் பயின்று வந்துள்ள விதம்.................................... 76-81

4.3. பெயர்ச்சுட்டா மரபு கையாளப்பட்டுள்ள விதம்......................... 81-82

4.4. அணி பயன்பாடு........................................................................ 82

4.4.1. உவமைகளின் பயன்பாடு.................................................. 82-92

4.4.2. குறிப்புப்பொருள்.......................................................................92-99

4.5. இயற்கை வர்ணனைகள் பயின்று வந்துள்ள விதம்.................... 99-106

5. ஐந்தாவது அத்தியாயம்

5.1. இப்பாடல்களில் இடம்பெற்றுள்ள புறச்செய்திகள்......................... 107-108

5.1.1. புறச்செய்திகள் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பங்கள்....................... 108-112

5.1.2. அரசர்கள், மன்னர்கள் பற்றிய வரலாற்று குறிப்புக்கள்............112-114

5.1.3. புலவரும் புறமும்.................................................................... 114

6. ஆறாவது அத்தியாயம்

6.1. நாட்டுவளம் பற்றிய செய்திகள்............................................... 115-116

6.2. தொழில்முறைகள்.......................................................................... 116-118

6.3. சமய வழிபாட்டு முறைகளும் சடங்குகளும்................................ 118-123

6.4. நம்பிக்கைகளும் வழக்குகளும்.................................................. 123-125

6.5. கலைகள்...................................................................................... 125-126

6.6. பொழுதுபோக்கு அம்சங்கள்......................................................... 126

7. ஏழாவது அத்தியாயம்

7.1. முடிவுரை...................................................................................... 127-128

உசாத்துணைகள்

பின்னிணைப்புக்கள்